தமிழ்நாடு அரசு
சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்- பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்/பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பை ரூ.12,000/-லிருந்து கிராமப் புறங்களில் ரூ.16,000/- எனவும் நகரப்புறங்களில் ரூ.24,000/- எனவும் உயர்த்தி ஆணையிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

**அரசாணை (நிலை) எண்.111** **நாள்: 27.11.2000**

படிக்கவும் :

1.அரசாணை(நிலை)எண்.50, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 2.8.93.

2.அரசாணை(நிலை)எண்.287, வருவாய்த்துறை நாள் 31.5.2000.

3.மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆணையர் மற்றும் இயக்குநரின் கடித எண்.ஏ3/5035/2000 நாள் 19.7.2000.

-----

**ஆணை :**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பொருளாதார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் வீட்டுமனை பெறுதல், சலவையகம், நடமாடும் சலவையகம் மற்றும் முடிதிருத்தகம் அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி பெறுதல் ஆகியவற்றிற்கு பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.6400/-லிருந்து உயர்த்தப்பட்டு ரூ.12,000/-ஆக நிர்ணயிக்கப்பட்டது.

2.வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்வதற்கான ஆண்டு வருமான வரம்பினை ரூ.12,000/-லிருந்து உயர்த்துவது குறித்து பரிசீலித்து இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கிராமப்பகுதிகளில் ரூ.16,000/- எனவும், நகரப்பகுதிகளில் ரூ.24,000/- எனவும் உயர்த்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே பத்தி 2ல் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்காக செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்கள் மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களுக்கும் ஆண்டு வருமான வரம்பை மாற்றி அமைக்கலாம் என ஆணையர் மற்றும் இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் பரிந்துரைத்துள்ளார்.

4.மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று அரசாணை (நிலை)எண்.287, வருவாய்த்துறை நாள் 31.5.2000ல் வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிபபடையில் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் இலவச வீட்டுமனை பெறுதல், இலவசக் கருவிகள் பெறுதல், சலவையகம், நடமாடும் சலவையகம் மற்றும் முடிதிருத்தகம் அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி பெறுதல் ஆகியவற்றிற்கு பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பை ரூ.12,000/-லிருந்து கிராமப் புறங்களில் ரூ.16,000/- (ரூபாய் பதினாராயிரம் மட்டும்) எனவும், நகரப்பகுதிகளில் ரூ.24,000/-(ரூபாய் இருபத்தி நாலாயிரம் மட்டும்) எனவும் நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு.எண்.65819/சந/2000 நாள் 21.9.2000ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசுச் செயலாளர்

பெறுநர்

ஆணையர் மற்றும் இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,சென்னை.5
ஆணையர் மற்றும் இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்,சென்னை.5
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர்,சென்னை.5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
மாநிலக்கணக்காயர்,சென்னை.6
மாநிலக்கணக்காயர், சென்னை.35

நகல் :

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை.9
வருவாய்த்துறை, சென்னை.9
நிதித்துறை, சென்னை.9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை.9
மாண்புமிகு பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை.9
இருப்புக்கோப்பு / உதிரி.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்